# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு

**பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்**


**இலங்கை மத்திய வங்கி**

2021 மாச்சு

தொகுதி 03 வெளியீடு 03


## முக்கிய பண்புகள்

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்





2021 மாச்சில் வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,094 மில்லியனுக்கு 66.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்





2021 மாச்சில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,926 மில்லியனுக்கு 59.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதம் (%)




2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 12.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில் இறக்குமதிச் செலவினமும் 12.0 சதவீதத்தினால் அதிகரித்தது.


### வர்த்தகப் பற்றாக்குறை (ஐ.அ.டொ. மில்)




வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2020 மாச்சில் பதிவுசெய்த ஐ.அ.டொலர் 549 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 மாச்சில் ஐ.அ.டொலர் 832 மில்லியனுக்கு விரிவடைந்தது.


## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் - (2021 சன - மாச்சு)

**ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்)** **இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)**




# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் - (சன-மாச்சு)




### ஏற்றுமதி அளவுச் சுட்டெண் - (சன-மாச்சு)





அனைத்து முக்கிய வகைகளின் அதிகளவான ஏற்றுமதிகள் காரணமாக 2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.


அனைத்து முக்கிய வகைகளின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் அதிகரித்தது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்


### வேளாண்மை ஏற்றுமதிகள்





### வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*





*கொழும்பு ஏலவிற்பனை விலைகளை அடிப்படையாகக் கொண்டது. 2020 ஏப்றிலிற்கும் ஒகத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்கான இறப்பர் ஏலவிற்பனை விலைகள் கிடைக்கப்பெறவில்லை.


2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் மேம்பட்டமைக்கு வாசனைத்திரவியங்கள் (கருவா) மற்றும் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்தளவான வருவாய்களே பிரதான காரணமாகும். இருப்பினும், சிறு வேளாண்மை உற்பத்திகள், கடலுணவு மற்றும் காய்கறிகள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

## கைத்தொழில் ஏற்றுமதிகள்


### கைத்தொழில் ஏற்றுமதிகள்





### கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)





### நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களின் ஏற்றுமதி விலைகள்





2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு புடவை மற்றும் ஆடை மற்றும் இறப்பர் உற்பத்திகள் போன்றவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களே பிரதான காரணமாகும். எனினும், பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தன.

## இறக்குமதிச் செயலாற்றம்

### இறக்குமதிச் செயலாற்றம் - (சன-மாச்சு)





### இறக்குமதி அளவுச் சுட்டெண் - (சன-மாச்சு)





2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு அனைத்து முக்கிய வகைகளின் இறக்குமதிகள் மீது ஏற்பட்ட அதிகளவிலான செலவினமே பிரதான காரணமாகும். அதேவேளை, அனைத்து முக்கிய வகைகளின் இறக்குமதியில் அதிகரித்த அளவுடன் 2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் (ஆ.ஆ) இறக்குமதி அளவுச் சுட்டெண் அதிகரித்தது.

## நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்


### நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்





### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)





### சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்





2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு (ஆண்டிற்கு ஆண்டு) சீனி, எண்ணெய் மற்றும் கொழுப்பு என்பனவற்றினால் உந்தப்பட்ட உணவு மற்றும் குடிபானங்களின் அதிகளவான இறக்குமதிகள் பிரதான காரணமாயமைந்த போதிலும் கடலுணவு மற்றும் அரிசி இறக்குமதி மீதான செலவினம் குறைவடைந்தது. தனியாள் வாகனங்களின் இறக்குமதி மீதான குறைந்த செலவினத்துடன் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் குறைவடைந்த வேளையில் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தது.

## இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்


### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்





### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)




### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்தச் சராசரி)





*2021 மாச்சில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.


2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு ஆடைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான உயர்ந்தளவான செலவினமே பிரதான காரணமாகும். இருப்பினும், கனிம உற்பத்திகள் மற்றும் உணவு தயாரிப்புக்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தது.

## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகள்


### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-மாச்சு)




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




2021 மாச்சு இறுதியில் மூன்று மாத காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு பொறி மற்றும் சாதனங்களின் உயர்ந்தளவான இறக்குமதிகளே காரணமாகும்.

# வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு

## ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2020 மாச்சு | 2021 மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) | 2020 சன-மாச்சு | 2021 சன-மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **122.7** | **257.3** | **109.8** | **506.5** | **663.8** | **31.0** |
| இதில் | தேயிலை | 62.5 | 124.6 | 99.3 | 270.1 | 338.1 | 25.2 |
| | தெங்கு | 19.7 | 41.2 | 109.2 | 70.4 | 96.3 | 36.7 |
| | வாசனைத்திரவியங்கள் | 12.9 | 38.6 | 199.1 | 51.0 | 113.8 | 122.9 |
| | கடலுணவு | 12.8 | 25.4 | 98.9 | 57.0 | 56.4 | -1.1 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **531.4** | **829.8** | **56.2** | **2,134.1** | **2,302.4** | **7.9** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 312.7 | 467.2 | 49.4 | 1,254.9 | 1,333.5 | 6.3 |
| | இறப்பர் உற்பத்திகள் | 54.5 | 95.2 | 74.8 | 196.2 | 256.3 | 30.7 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 37.0 | 28.8 | -22.3 | 177.7 | 85.8 | -51.7 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 38.1 | 51.0 | 33.7 | 110.3 | 132.4 | 20.0 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 21.1 | 44.2 | 109.2 | 86.4 | 124.9 | 44.6 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 8.4 | 27.7 | 228.5 | 54.6 | 70.8 | 29.7 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 3.7 | 3.2 | -12.8 | 16.6 | 11.2 | -32.7 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **2.2** | **6.7** | **208.7** | **9.1** | **16.0** | **77.0** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **656.2** | **1,093.8** | **66.7** | **2,649.6** | **2,982.2** | **12.6** |

## இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2020 மாச்சு | 2021 மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) | 2020 சன-மாச்சு | 2021 சன-மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **267.1** | **379.6** | **42.1** | **966.1** | **997.9** | **3.3** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 143.0 | 189.7 | 32.6 | 426.4 | 505.3 | 18.5 |
| இதில் | காய்கறிகள் (அ) | 38.8 | 43.4 | 12.0 | 104.7 | 111.1 | 6.1 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 124.0 | 189.9 | 53.1 | 539.7 | 492.6 | -8.7 |
| இதில் | தனியாள் வாகனங்கள் | 39.5 | 1.0 | -97.4 | 156.4 | 2.4 | -98.4 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **699.7** | **1,129.9** | **61.5** | **2,545.7** | **2,990.7** | **17.5** |
| இதில் | எரிபொருள் | 237.7 | 347.2 | 46.1 | 948.2 | 977.2 | 3.0 |
| | புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 139.3 | 250.9 | 80.2 | 622.0 | 710.2 | 14.2 |
| | வளமாக்கிகள் | 6.7 | 16.3 | 144.3 | 25.9 | 35.0 | 35.2 |
| | கோதுமை மற்றும் சோளம் | 62.5 | 31.1 | -50.3 | 79.8 | 93.5 | 17.1 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **238.2** | **416.5** | **74.8** | **990.9** | **1,052.5** | **6.2** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 130.2 | 274.6 | 110.8 | 572.4 | 685.1 | 19.7 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,205.0** | **1,925.9** | **59.8** | **4,502.7** | **5,041.1** | **12.0** |

## வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 2020 மாச்சு | 2021 மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) | 2020 சன-மாச்சு | 2021 சன-மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -548.8 | -832.2 | | -1,853.1 | -2,059.0 | |

## வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (ஆ)

| விடயம் | | 2020 மாச்சு | 2021 மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) | 2020 சன-மாச்சு | 2021 சன-மாச்சு | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 91.3 | 152.2 | 66.7 | 122.9 | 138.4 | 12.6 |
| | அளவுச் சுட்டெண் | 107.4 | 168.0 | 56.5 | 130.0 | 144.6 | 11.3 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 85.1 | 90.6 | 6.5 | 94.6 | 95.7 | 1.2 |
| **இறக்குமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 107.8 | 172.4 | 59.8 | 134.3 | 150.4 | 12.0 |
| | அளவுச் சுட்டெண் | 139.4 | 196.0 | 40.6 | 156.6 | 171.1 | 9.2 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 77.4 | 87.9 | 13.6 | 85.8 | 87.9 | 2.5 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | 109.9 | 103.0 | -6.3 | 110.3 | 108.8 | -1.3 |

(அ) தானியங்கள், வெங்காயம், உருளைக்கிழங்குகள், அவரை வகை காய்கறிகள் மற்றும் ஏனையவை உள்ளடங்கலாக

(ஆ) ஐ.அ.டொ. நியதிகளில்